Fair copy to SEIAA

**TAMILNADU POLLUTION CONTROL BOARD**

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE ENVIRONMENTAL CLEARANCE FROM MINISTRY OF ENVIRONMENT, FOREST & CLIMATE CHANGE BY M/S. SIVASAKTHI ROCK EXPORTS FOR THE PROPOSED QUARRY PROJECT OF 1.62.0 HECTARE LOCATED AT S.F.NO.480/1 (PART) OF NADANTHAI VILLAGE, PARAMATHI VELUR TALUK, NAMAKKAL DISTRICT HELD ON 04.10.2024 AT 11:30 AM IN M/S.MANIYANUR KONGU VELALAR THIRUMANA MANDAPAM, MANIYANUR VILLAGE, PARAMATHI VELUR TALUK, NAMAKKAL DISTRICT.**

**Project Name:**

The proposed project draft of M/s. Sivasakthi Rock Exports at S.F.No.480/1 (Part) of Nadanthai village, Paramathi velur Taluk, Namakkal District at an extent of 1.62.0Ha Ha.

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Dr. S. Uma IAS | District Collector, Namakkal District. |
| 2. | Tmt. S. Suganthi | Revenue Divisional officer Thiruchengode |
| 3. | Thiru. G. Senthil kumar | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Kumarapalayam. |
| 4. | Thiru. N. Gunasekaran | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Kumarapalayam. |
| 5. | Thiru. T. Soundararajan | Assistant Manager, Tamil Nadu Pollution Control Board, Kumarapalayam. |
| 6. | Project Proponents | 1 No |
| 7. | Thiru. Suryakumar | M/s. Adhi Boomi Mining & Enviro Tech (P), Limited, Salem. |
| 8. | Public | 117 Nos. (Annexure - I enclosed) |

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Kumarapalayam.**

The District Environmental Engineer has informed that the public hearing for M/s. Sivasakthi Rock Exports is to be conducted and as per the EIA Notification, 2006 certain projects among which for the cluster conducting public hearing is mandatory. This public hearing is not a grievance redressal meeting and requested to express their views against or favour of the proposed quarry and the same would be registered and will be

sent to SEIAA, Tamil Nadu. If the views are expressed short and clear would be conducive to translate in English. The technical expert will be explained about the proposed project.

The technical expert representing M/s. Adhi Boomi Mining & Enviro Tech (P), Limited, Salem has invited the District Collector, District Environmental Engineer, other officials & public and power point presentation was displayed about a 1 No. of proposed quarry. After the presentation, District Environmental Engineer has invited the public to express their opinion/views either in verbally or by written representation.

The proceeding of the public hearing is furnished as below.

**PUBLIC VIEWS:**

1. **R. Anand Kumar – Periya soormapalayam**

He has informed that is no connectivity between quarry and our village. Also, no no environmental issues or impact and has not affected so far. Hence, the permission may be granted to the quarry Nothing was affected. Permission can be given.

2. **Thiru. Raju- Soorampalayam:**

He has informed that we are very happy this quarry is functioning in our village.

3. **Vaseekaran, Nadanthai Village.**

He has requested that the sivasakthi quarry is located nearby house. no effect water bodies have affected and also there is no explosive vibration in the area. Hence I request you to permit the operation of this quarry.

4. **Thiru. Arun, Paramathi**

He has informed that It's a great thing that conducting Public hearing here. In this meeting, it is to be allowed first preference to the native local public to express their views and to be given more time to them. But it is giving an opportunity to the people who come from other districts as social activist. The opportunity should be given to the men of the soil who have born in this locality and also the brothers and sisters who are born from the village here should be given an more opportunity. Because they are only know the pros and cons of village and functioning of the quarry. The people who have says that the social activist are doing everything. However, they did not come forward for the people's basic needs problems like road facilities to raise the standard of living of the people and the social activist to be avoided for participating in any public hearing meeting.

5. **Tmt. Poongodi, Subbaiah palayam:**

She has informed that said that we don't have any problem by this operation of the quarry and our house is located within 1 kilometer from the quarry only. Thank you.

6. **Tmt. Maheshwari, Subbaiah palayam:**

She has informed that we don't have any problem by the functioning of the quarry.

7. **Tmt. Lakshmi, Subbaiah palayam:**

She has informed that that we don't have any problem by the functioning of the quarry. The quarry owners are helping lot to peoples in this surrounding area. Thank you.

8. **Thiru. R. Gunasekaran, Periya Surampalayam.**

He has informed that we do not have any objection for granting permission to the quarry of Sivashakti Rock Exports and the same is expressing on behalf of the village of Periya Surampalayam.

9. **Thiru. Guru, Nadanthai Village,**

He has expressed that I am working in Sivashakti Rock Exports only and I just came to the quarry by discontinued my B.com degree. Now, they make read me. Similarly, they also helping to my sister studies and both are studying now. There is no problem due to operation of this quarry. If the quarry is stopped then they would be faced lot of problem.

10. **Thiru. K.S. Senthilkumar, Lawyer Grandson of Indian Freedom Fighter, Namakkal.**

He has informed that I would like to express my gratitude to the respected Revenue Divisional officer, Thiruchengode who is conducting this public hearing meeting including the public. In this third event of this public hearing, I would like to record the following statements as a comment in this public hearing meeting.

According to the siting criteria of the Tamil Nadu Minor Mineral Concession Rule 1959-36(1) recognized government houses, green houses, Village natham and habitation of Scheduled Caste people all are located around Sivasakthi Rock Exports. Therefore, this quarry is not eligible to operate in any way in according to the law and action should also be taken against the government employees who helped to prepare fake documents for the establishment of this quarry.

It is most important that to stop operation of this quarry by this time to protect the social environment and biodiversity need at this time. The legal action should be taken against this quarry. I would like to express my opinion that the

sitting criteria is not meet out. Hence, the quarry should not be allowed in any way. Thank you.

### 11. **Thiru. Shanmugam - Coordinator of Anti-Illegal Quarry Movement, Karur:**

If a quarry is to be operated, it must be obey the Tamil Nadu Minor Mineral Concession Rules, 1959 enacted by the Government of Tamil Nadu. If the quarry is to be operated according to law, the law says that there should be no houses, dwellings, buildings, bore wells, temples, or sacred symbols within 300 meters from the quarry. But, there are houses, Village natham, village drains, bore wells and road ways all are located within a radius of 300 meters around this quarry. He has come here to say that the permission should not be given to this quarry.

This quarry is located in 490/1 (Part). As I have already informed that don't give permission to the quarry any part of S.F.No. Because, they have illegally mined out different types of minerals as part and also if it is put part in S.F.No., it cannot give permission to this quarry ourselves. In Karur district, there are 46 quarries have been collected as fine Rs. 160 crores. The High Court of Madras, Madurai Bench has also directed to inspect and to take action around 325 quarries in this regard.

Because, if it say part in S.F.No, we don't know which part of S.F.No.is being quarried. We are informing in all meeting that sub-division of S.F.No should be done and earmark stone should be installed and then permission should be given the quarries. In this connection, you should not give permission to this quarry as it has been mentioned as part. There is a house located within the radius of 300 meter of S.F.No. 519 and two houses located within100 radius. Similarly, there is a house located at a distance of 158 meters in S.F.No.465 from the quarry site. Also, there is a house located at a distance of 290 meter in S.F.No. 515. On the north-west side of this quarry site there is a Village Natham houses at survey number 553, 534. Similarly, There is Urnatham in china surampalayam village at a distance of 290 meters from the S.F.No. 551 and found it is lot of violations. They have informed that there are no houses within 300 meters of this quarry but it was there more than ten houses located around this quarry. Hence, permission should not be given to this quarry.

Apart from that, if this quarry is operated in that area, then the soil, water, air environments and the socio-economic environment are will be affected. How, it should be addressed the problem and non of the quarries have addressed this problem. Similarly, they did not provided the green belt development and fencing all around the periphery of the quarry site. Further, they don't have any scheme which benefits the lobours / workers of this quarry.

Also, the existing quarries did not have any green belt development and fencing all around the periphery of the quarry site. Because of this, the earthquakes are happening frequently in this area and lots of damage occurs here. Now, it is monsoon season and currently about 104 - 105 degrees of temperature and could not tolerate this scorching temperature. Tamilnadu government is spending Rs.700 crores for planting trees. If these quarries owner joined together and plant trees together, Tamil Nadu will be green tamil nadu. Finally, He has informed that many violations noticed hence the permission should not be given to this quarry.

**12.Thiru. K.Periya samy, Periya soormpalayam:**

He has informed that my house is located just next to sivaskathi quarry and there is no problem in my home. I am doing agriculture activity within 100 feet radius of this quarry and there is no problem. They have informed that there are two houses are located in S.F.No.589 which is my house only. Hence, he has informed that no problem to our home. Thank you.

**13.Thiru. K. Palanivel, Kondaraan palayam:**

He has informed that the resolution passed in the Chittapoondi Gram Sabha meeting and the same is submitting to the Revenue Divisional Officer. On the basis of this resolution, we request to the District Collector and Revenue Divisional Officer to approve and implement this resolution.

**14.Thiru. Mugilan, Co-ordinator, Tamil Nadu Environment Protection Movement:**

He has expressed his wishes to the District Collector and Revenue Divisional officer, District Environmental Engineer, all revenue officers, all various department officials who are conducting this public hearing meeting jointly organized by the District Administration and Tamil Nadu Pollution Control Board. Also, I express my wishes and greetings to all public and quarry owners to who have participated.

I would like to remember one thing. In 2010, Thiru.Sagayam IAS, then District Collector a similar public hearing meeting was conducted to an industries, it was opined that the come to operation, the livelihood of the people in the area would be destroyed and this area would be greatly affected. The public were opposed the factory in the public hearing meeting. He has expressed and appreciated to Thiru. Perungurichi Mani and I salute him for his effort on the public hearing. It was banned the public hearing during 2010, since the tributary and branch river of cuavery is Manimutharar located at a distance of 3.5 Kilo meter from the Sivasakthi Quarry.

The certificate issued by the village administration officer and the mining plan were mentioned that there is houses within the radius of 300 meters from the quarry site. But in the affidavit given by the owner of this quarry has to sworn that there are no houses within 300 meters. If this is wrong then the license of this quarry should be cancelled.

Further, On the day of Vijaya Dasami, there was an explosion from a quarry and the impact was observed around three and a half kilometers away. There is a house located at a distance of 150 meters in S.F.No.462, in S.F.No.519 and there is a house at a distance of 200 meters in S.F.No.553 and in S.F.No.512. Also, the village natham is located at a distance of 260 meters in S.F.No.553 and S.F.No.554.

Similarly, they have informed that no building located at a distance of 500 meter. They are asking license for the quarry with all these irregularities. However, there is a village water tanks, a borewell, a community hall and a canteen and anganvadi (for below five-year-old children). But, the quarry owners have reported in page 319 that no building is within 500 meters.

There are green houses are located within a radius of 300 meters and they are hiding all this facts and submitted the report. They are giving fake confession. Also, the Hon'ble Chief Minister, Tamil Nadu has spoken an one day that the people like Thiru. Mughilan are fighting to close all the illegal quarries but they have put him zinto the jail. But, now days the government is implementing and telling with this terrorist name only.

During 2011, the commissioner when he was in the District Collector, he had conducted the pollution control board grievance day meeting once a month at Tiruchengode and we are singers of the soil and people. The people living within 500 meters radius of the quarry will be are affected in various ways, due to the poisonous gas released during the explosion. And the Tamil Nadu government is planting trees through the Tamil Nadu Pollution Control Board by using the tax money of the people. But, the Quarry owners have been obtained 3 to 4 lease to mine of mineral and they have to be planted at lease 2000 trees. The wire fence is also not provided by the unit quarry owners and the labours/workers who is being died here and not quarry owners.

Similarly, Hon'ble Union Minister of Road Transport, Nitin Gadkari has sent a circular to the state governments that not more than 10 tonnes weights should be allowed on rural roads. But, they are being transported more than 70 to 80 tons and it was found 1.5 feet depth of ditch in the road. All these roads are maintained by the Central and State Governments and are paid by the people tax money not the quarry owners money. In the last DMK election manifesto it has been announced 200 manifesto, out of which the granite licenses should not be granted to private individuals by the

government of Tamil Nadu. Hence, granite quarries should be run by the government and it should be operated by the state government. The quarry owners have to pay green fund is 10% and to pay CSR fund about 2 % to the Government.

Further, he has informed that the granite quarries should not be given to private individuals and the District is a Model District where many protests have taken place. Therefore, the permission should not be granted as there are doing many violations. I also request the authorities to act properly and do their duty to protect this soil and has requested that the quarry should not be permitted. He also informed that if SEIAA gives permission to the quarry, it will face legal consequences. Thank You.

After the public expressed their views, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Kumarapalayam asked to the public to submit written petitions directly to the District Collector/Revenue Divisional Officer. The public and non-governmental organizations submitted their views in writing to the District Collector.

After expressing the views of the people the Revenue Divisional Officer, Thiruchengode stated that in both videos and audio recording of the proceeding would be sent to SEIAA and finally asked the quarry owners to provide fencing all around the premises, development of greenbelt, earmarks the boundary with stones and instructed to follow the government rules and operate the quarries. The issue of Environmental Clearance to the proposed quarry will be decided by the SEIAA, Tamil Nadu. Further, it has stated Green belt/corridor will be constructed from the funds obtained from the quarry and further facilities to this near village.

After the public hearing, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board thanked all the public for attending the public hearing on behalf of District Collector. There is no written statement/petitions received during the public hearing.

The proceedings of the meeting were video graphed and recorded in CD which is enclosed.

13/12/2024

**DEE/TNPCB**
**Kumarapalayam**

13/12/24

**District collector**
**Namakkal**

(6/7)

Fair copy to SEIAA

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

**04.10.2024 அன்று காலை 11.30 மணியளவில், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், மணியனூர் கிராமம், மணியனூர் கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், நடந்தை கிராமம் என்ற இடத்தில் அமைய உள்ள தி/ள். சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ் குழுமம், புல எண். 480/1 (பகுதி), நடந்தை கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்:**

**திட்டத்தின் பெயர்**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், நடந்தை கிராமம் என்ற இடத்தில் அமைய உள்ள தி/ள். சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ், புல எண். 480/1(பகுதி), குவாரி பரப்பு 1.62.0 ஹெக்டேர் திட்டத்தின் வரைவு.

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | டாக்டர்.ச. உமா, இ.ஆ.ப., | : | மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம் |
| 2. | திருமதி. சே. சுகந்தி | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>திருச்செங்கோடு. |
| 3. | திரு. க. செந்தில்குமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>குமாரபாளையம். |
| 4. | திரு. நா. குணசேகரன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>குமாரபாளையம். |
| 5. | திரு. தே. சௌந்தரராஜன்,. | : | உதவி மேலாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>குமாரபாளையம். |
| 6. | திரு. சூரியகுமார் | : | சுற்றுச்சூழல் ஆலோசகர்,<br>ஆதி பூமி மைனிங் & என்விரோ டெக் (பி) லிமிடெட், சேலம் |
| 7. | பொதுமக்கள் | : | 117 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், குமாரபாளையம்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், குமாரபாளையம் அவர்கள் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், நடந்தை கிராமம் என்ற இடத்தில் அமைய உள்ள தி/ள். சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ் குவாரி திட்டம் குறித்தான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட உள்ளது என்றும், 2006 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கையின் படி பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு (Project) அவசியம் (Compulsory) ஆக்கப்பட்டுள்ளதால், அதன் படி குழுமத்தில் (Cluster) உள்ள குவாரிகளுக்கு இந்த பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்பது அவசியமாகும் (Mandatory). இது ஒரு குறைதீர்க்கும் கூட்டம் அல்ல என்றும், மக்களுடைய குறைகள் (Grievances) எதுவாக இருந்தாலும் பதில் சொல்லக்கூடிய கூட்டம் அல்ல என்றும், இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை ஆதரவாகவோ அல்லது எதிராகவோ தெரிவிக்கலாம் எனவும், அதை நாங்கள் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னைக்கு அனுப்புவது தான் கூட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் கருத்துக்களை சொல்ல விரும்புவர்கள் பெயர்களை பதிவேட்டில் பதிவு செய்து கொண்டால் பேச ஏதுவாக இருக்கும். சுருக்கமாக மற்றும் தெளிவாக சொல்லும் பட்சத்தில் பதிவுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க சுலபமாக இருக்கும் என்று கூறி இந்த சுரங்கம் குறித்தான தொழில்நுட்ப அறிக்கையை சுற்றுச்சூழல் ஆலோசர் அவர்களை வழங்க கேட்டுக் கொண்டார்.

சுற்றுச்சூழல் தாக்க திட்ட ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்ளோரேசன் அண்டு மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் அவர்கள் மாவட்ட ஆட்சியர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பிற அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களை வரவேற்று ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள ஆறு குவாரிகள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒரு குவாரி குறித்து ஒளிப்பட காட்சி மூலம் விளக்கம் அளித்தார். அதன் பின், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், குமாரபாளையம் அவர்கள் பொதுமக்களிடம் தங்களது கருத்துக்களை சுருக்கமாக இருப்பின், வாய்மொழியாகவோ அல்லது விரிவாக இருப்பின் எழுத்து பூர்வமாகவோ தெரிவிக்கலாம் என கேட்டுக் கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் பேசிய பொது மக்களின் கருத்துக்கள் கீழ்க்கண்டவாறு,

1. <u>திரு. R. ஆனந்த் குமார், பெரிய சூரம்பாளையம்:</u>

எங்கள் ஊருக்கும் கிட்டத்தட்ட இதற்கும் சம்பந்தம் இல்லை. சுற்றுச்சூழல் எந்த பாதிப்பும் இல்லை. எதுவும் பாதிக்கப்படவில்லை. அதனால் தாராளமாக அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்தார்.

2. <u>திரு. ராஜு, சூரம்பாளையம்:</u>

இந்த குவாரி நடப்பதால் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்று தெரிவித்தார்.

3. <u>திரு. வசீகரன், நடந்தை:</u>

சிவசக்தி குவாரி என் வீட்டிற்கு அருகில் தான் உள்ளது. இதில் நீர் நிலைகளும், மற்ற வெடி அதிர்வுகள் போன்ற எந்த பாதிப்பும் இல்லை. இந்த குவாரி இயக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

4. <u>திரு. அருண், பரமத்தி:</u>

கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது அருமையான விஷயம். அதில் இந்த மண்ணின் மைந்தர்கள் பேச கூற வேண்டும், அவர்களுக்கு அதிகமான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். நீங்கள் வேறு மாவட்டத்தில் இருந்து வரும் ஒரு சமூக ஆர்வலர் என்ற போர்வையில் வருபவர்களுக்கு சிலருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இங்கே இருக்கின்ற மண்ணின் மைந்தர்களுக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். இங்கு இருக்கும் அண்ணன் தம்பிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு தான் இந்த குவாரி நடப்பதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் தெரியும். அதை விட்டுவிட்டு நான் சமூக ஆர்வலர் என்றும், நாங்கள் எல்லாம் செய்து விடுவோம் என்கிறார்கள். எங்கு சென்று விட்டார்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த மக்களின் சாலை வசதிகளும் அடிப்படை வசதிகளும் இல்லாதவர்கள் இந்த குவாரிப் பிரச்சனைகளுக்கு மட்டும் வந்துவிடுகிறார்கள். இவர்களை தடை செய்து எந்த கருத்துக் கேட்பு கூட்டத்திலும் கலந்து கொள்ளாமல் செய்ய வேண்டும். கருத்துக்களை மக்களை வைத்து இந்த மண்ணின் மைந்தர்களிடம் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார்.

5. **திருமதி. பூங்கொடி, சுப்பையாபாளையம்:**

இந்த குவாரியினால் எந்த பிரச்சனையும் இல்லை. ஒரு கிலோமீட்டர் தொலைவில் தான் எங்கள் வீடு இருக்கிறது, நன்றி என்று தெரிவித்தார்.

6. **திருமதி. மகேஸ்வரி, சுப்பையாபாளையம்:**

இந்த கல்குவாரி நடப்பதால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்தார்.

7. **திருமதி. லட்சுமி, சுப்பையாபாளையம்:**

இந்த கல்குவாரியினால் எந்த பிரச்சனையும் இல்லை. எல்லாருக்கும் நன்மை செய்கிறார்கள். எந்த பிரச்சனையும் இல்லை. சுற்று வட்டார பகுதிகளுக்கு எல்லோருக்கும் நன்மை செய்கிறார்கள் என்று தெரிவித்தார்.

8. **திரு. R. குணசேகரன், பெரிய சூரம்பாளையம்:**

அமைகின்ற சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ் என்ற கிரானைட் கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை என்பதை எங்கள் பெரிய சூரம்பாளையம் நடந்த கிராமத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

9. **திரு. குரு, நடந்தை:**

நான் சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ்–ல் தான் வேலை செய்கிறேன். நான் B.com பட்டப்படிப்பு நிறுத்தி விட்டு தான் வந்தேன், இப்போ உரிமையாளர் தான் என்னை படிக்க வைக்கிறார். அதே மாதிரி என்னுடைய தங்கையையும் படிக்க வைக்கிறார். இதனால் நாங்கள் இரண்டு பேரும் படித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஒன்றும் பிரச்சனை இல்லை, அப்படி பிரச்சனை என்றால் எங்களுக்கு தான் முதலில் வரும், நன்றி என்று தெரிவித்தார்.

10. **திரு. K.S. செந்தில்குமார். வழக்கறிஞர் மற்றும் இந்திய சுதந்திர போராட்ட தியாகியின் பேரன், நாமக்கல்:**

இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தின் மூன்றாவது நிகழ்வை நடத்திக்கொண்டிருக்க கூடிய மரியாதைக்குரிய திருச்செங்கோடு கோட்டாட்சியர் உள்ளிட்ட அவையோர் அனைவருக்கும் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது நிகழ்வாக சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் அமைந்திருக்கக்கூடிய நடந்தை கிராமத்தினுடைய இந்த கருத்து கேட்ப கூட்டத்தில் பின்வரும் தகவல்களை கூட்டத்தினுடைய கருத்துரையாக பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட்ஸ்னுடைய அமைவிடத்தை சுற்றி சைட்டிங் கிரிட்ரியா பேசிஸ் (siting criteria basis) என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதி 1959–36(1) இன் படி, இந்த குவாரியை சுற்றி சைட்டிங் கிரிட்ரியா என்று சொல்லக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட அரசு வீடுகள், பசுமை வீடுகள், ஊர் நத்தம் மற்றும் பட்டியல் இன மக்கள் வாழக்கூடிய ஊர் நத்தங்கள் உள்ளிட்ட அனைத்தும் அமைந்திருக்கின்றன. ஆகவே சட்டப்படி இந்த குவாரி இயங்குவதற்கு அனுமதி பெறுவதற்கு எந்த வகையிலும் தகுதி இல்லை என்று சட்டபூர்வமான விஷயத்தை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன் மேலும் இந்த குவாரி அமைவதற்கு போலியான ஆவணங்களை தயாரித்து கொடுத்திருக்கும் போலி ஆவணம் தயாரிக்க உதவிய அரசு சார்ந்த அரசு ஊழியர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், மேலும் அவ்வாறு சட்டப்படி எடுக்கப்பட்டு போலியாக அமைய உள்ள இந்த கல்குவாரியை தடுப்பது என்பது இந்த நேரத்திலேயே மிக தேவையான சமூக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கு தேவையான இந்த நேரத்தில் கட்டிக்காட்டிக் கொண்டு எக்காரணம் கொண்டும் சைட்டிங் கிரிட்ரியாவை பேசிய எதிர்த்து அமையவிருக்கின்ற இந்த குவாரிக்கு எந்த விதத்திலும் அனுமதிக்க கூடாது என்று இந்த நேரத்தில் என் பதிவை தெரிவித்துக் கொள்கிறேன், நன்றி என்று தெரிவித்தார்.

11. <u>திரு. சண்முகம் – சட்டவிரோத கல்குவாரி எதிர்ப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர், கரூர்:</u>

ஒரு குவாரி அமைய வேண்டும் என்றால் அது தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959 –ன் படி, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இயங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சட்டம் இயற்றியுள்ளது. அந்த குவாரி சட்டப்படி இயங்க வேண்டும் என்றால் அந்த குவாரியின் 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள், வீட்டுமனைகள், ஊர்நத்தம், ஆழ்துளை கிணறுகள், கோயில்கள், புரதான சின்னங்கள் இருக்கக் கூடாது என்று சட்டம் சொல்கிறது. ஆனால் இந்த குவாரியை சுற்றி 300 மீட்டர் சுற்றளவிலேயே வீடுகள், வீட்டுமனைகள், ஊர் நத்தம், ஆழ்துளை கிணறுகள் மற்றும் வண்டிப்பாதைகள் ஆகியவை உள்ளதால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்பதற்காக நான் இங்கு பேச வந்துள்ளேன்.

இந்த குவாரியை சுற்றி பார்த்தால் 300 மீட்டர் சுற்றளவில் 490/1 (பகுதி) என்று சொல்லப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னதை போல இந்த பகுதி (Part) என்று கூறும் போது தாங்கள் தயவு செய்து அனுமதி வழங்கக் கூடாது. ஏனென்றால் பகுதி என்று சொல்லிவிட்டு சட்டவிரோதமாக பல்வேறு விதமான கனிமங்களை வெட்டி எடுத்துக் கொண்டுள்ளனர். மேலும் பகுதி என்று போட்டால் தங்களாலேயே அனுமதி வழங்க இயலாது. கரூர் மாவட்டத்தில் மட்டும் 46 குவாரிகளுக்கு 160 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 325 குவாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை சொல்லி இருக்கிறார்கள்.

ஏனென்றால் இங்கு பகுதி (Part) என்று கூறினால் எந்த பகுதியில் (Part) வெட்டி எடுக்கிறார்கள் என்பது தெரியாது. அதனால் உட்பிரிவு செய்து கல் வைத்து அதற்கு அப்புறம் அனுமதி வழங்க வேண்டும் என்று ஒவ்வொரு கூட்டத்தில் கூறுகிறோம். அதேபோன்று இந்த குவாரிக்கு பகுதி (part) என்பது போடப்பட்டதால் அனுமதி கொடுக்க வேண்டாம். இந்த குவாரி புலத்தை சுற்றி 300 மீட்டர்–இல் புல எண் 519–இல் 100 மீட்டரில் இரண்டு வீடுகள் உள்ளது. அதே போன்று குவாரி அமையக்கூடிய புலத்தின் 465–இல் 158 ஆவது மீட்டரில் ஒரு வீடு உள்ளது. அதே போன்று இந்த குவாரிப்புலத்தின் 515 ஆவது சர்வே எண்ணில் 290 மீட்டரில் ஒரு வீடு உள்ளது. இந்த குவாரி புலத்தின் வடமேற்கு புறத்தில் 553, 534 சர்வே எண்ணில் ஊர் நத்தம் வீடுகள் உள்ளன. அதே போன்று இந்த குவாரி புலத்திலிருந்து புல எண். 551–ல் 290 மீட்டரில் சின்ன சூரம்பாளையத்தில் ஊர்நத்தம் உள்ளது. இப்படி பல்வேறு விதமான விதிமீறல்கள். இந்த குவாரியில் 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள் இல்லை என்கிறார்கள். ஆனால் அதில் கிட்டத்தட்ட பத்துக்கும் அதிகமான வீடுகள் இருக்கும் போது, இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க கூடாது. அது மட்டுமல்லாமல் இந்த குவாரி அமைந்தால் நிலச்சூழல், நீர்ச்சூழல், காற்றுச்சூழல், ஒளிச்சூழல் போன்ற பல்வேறு சூழல், சமூக பொருளாதார சூழல் எவ்வாறு பாதிக்கப்படும், அதை எவ்வாறு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று தான் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடத்துகிறார்கள். எந்தப் பகுதியில் குவாரிகள் சூழல் பாதிப்பை எல்லாம் செய்கிறார்கள் என்றால் எந்த குவாரியும் செய்வது கிடையாது. மேலும் இங்கு பசுமை திரை அமைக்கப்படவில்லை. அதே போல் தொழிலாளருக்கு நலன்கள் செய்கின்றனர் என்றால் எல்லா நாளும் செய்வதில்லை.

ஏற்கனவே இயங்கிய குவாரிகளுக்கு பசுமை திரை வைத்திருப்பார்கள் என்றால் வைத்திருப்பது இல்லை. எனவே இங்கு நிலநடுக்கம் அடிக்கடி நடக்கிறது. மிகப் பெரிய அளவுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. தற்போது பருவ மழைப் பெய்யக்கூடிய காலம். தற்போது 104 டிகிரி – 105 டிகிரி வெப்பம் இருக்கிறது. எனவே இதுவே நம்மால்

ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழ்நாடு அரசு 700 கோடி மரங்கள் நடுவதற்காக செலவு செய்கிறார்கள். இந்த குவாரிகாரர்கள் சேர்ந்து மரங்கள் நட்டாலே, தமிழ்நாடு பசுமை வளமாக மாறும் அதனால் பல்வேறு விதமான விதிமீறல்கள் இருப்பதால் இந்த குவாரிக்கு எக்காரணத்தினால் அனுமதி கொடுக்கக் கூடரது, நன்றி என்று தெரிவித்தார்.

12. திரு. K. பெரியசாமி – பெரிய சூரம்பாளையம்:

சிவசக்தி கிரானைட் பக்கத்தில் தான் எனது வீடு உள்ளது, வீட்டில் எந்த பிரச்சனையும் இல்லை. பக்கத்தில் 100 அடியில் தான் விவசாயம் செய்கிறேன். எந்த பிரச்சினையும் இல்லை. புல எண். 589–இல் இரண்டு வீடு உள்ளது என்று கூறியிருந்தார்கள். அது என் வீடு தான். வீட்டில் எந்த பிரச்சனையும் இல்லை. நான் பக்கத்து வீடு தான் எந்த பிரச்சினையும் இல்லை. இதற்கு பக்கத்தில் தான் விவசாயம் செய்கிறேன், நன்றி என்று தெரிவித்தார்.

13. திரு. K. பழனிவேல் – கொண்டரசன்பாளையம்:

சித்தபூண்டி கிராம சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மான நகலை வருவாய் கோட்டாட்சியரிடம் வழங்குகிறோம். அந்த தீர்மானத்தின் அடிப்படையில் அந்த தீர்மானத்திற்கு மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் அவர்கள் ஒப்புதல் அளித்து இந்த தீர்மானத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

14. திரு. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்:

நாமக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இணைந்து நடத்துகின்ற சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட் என்ற கிரானைட் குவாரியின் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்துகின்ற பேரன்புக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்செங்கோடு கோட்டாட்சியர் மற்றும் அனைத்து வருவாய் துறை அலுவலர்களுக்கும், இந்தக் கூட்டத்தை முன்னிலை வகுத்து நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள பொதுமக்களுக்கும், குவாரி உரிமையாளர் ஆகிய அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒன்றை நினைவு கூற விரும்புகிறேன். விதியை மீறி ஏற்கனவே இந்தப் பகுதியில் அமைய தொழிற்சாலையை எதிர்த்து, கடந்த

2010–இல் அவற்றிற்கு எதிர்த்துப் போராடி, மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த அன்றைய காலத்தில் இருந்த திரு. சகாயம் அவர்கள், இந்த ஆலைகள் இயங்குமானால் அந்தப் பகுதியில் மக்களின் வாழ்வாதாரம் நலிந்து போய்விடும், இந்தப் பகுதி மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகும் என்று அவருடைய கருத்து கேட்பு கூட்டத்தில் வலியுறுத்த காரணமாக இருந்து நம்மை விட்டு பிரிந்த பெருங்குறிச்சி மணி அவர்களுக்கு என் வீரவணக்கம். இதே மேடையில் தான் ஒரு கருத்து கேட்டுக் கூட்டத்தில் ஆலையை எதிர்த்து பலரும் போராடினார்கள். இறுதியாக சைட்டிங் கிரிட்ரியா என்று சொல்லப்படும் காவிரி நதியின் கிளை ஆறான, திருமணிமுத்தாறு என்ற நதியிலிருந்து மூன்றரை கிலோ மீட்டர் இருந்ததால் 2010 –இல் தடை செய்யப்பட்டது. தற்பொழுது இந்த சிவசக்தி ராக் எக்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தின் கருத்து கேட்டு கூட்டம் நடக்கின்றது.

இந்த குவாரியில் கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்று மற்றும் மைனிங் பிளானில் 300 மீட்டர் தொலைவில் வீடுகள் உள்ளது என்று தெரிவித்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் இந்த குவாரியின் உரிமையாளர் அளித்துள்ள சத்திய பிரமாண பத்திரத்தில் 300 மீட்டர் தொலைவில் வீடுகள் எதுவும் இல்லை என்று சத்தியமாக சொல்லி இருக்கிறார்கள். இது தவறு எனில் இந்த குவாரியின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்.

கடந்த விஜய தசமியில் ஒரு குவாரியால் வெடி விபத்து ஏற்பட்டது. மூன்றரை கிலோமீட்டர் தொலைவில் அதன் பாதிப்பு இருந்தது. மேலும் புல எண். 462, 150 மீட்டரில் ஒரு வீடும், புல் எண். 519, 150 மீட்டரில் ஒரு வீடும் உள்ளது. புல எண். 512, 200 மீட்டரில் உள்ளது. அதே போல் புல எண். 553, 554–ல் பட்டியலின வீடுகள் உள்ள நத்தம் 260 மீட்டரில் உள்ளது. இவ்ளோ முறைகேடுகள் வைத்துக் கொண்டு குவாரிக்கு உரிமம் கேட்கிறார்கள். அதேபோல் 500 மீட்டர் தொலைவில் எந்த கட்டிடமும் இல்லை என்கிறார்கள். இந்த ஊரில் பள்ளிக்கூடங்கள், நீர்த்தொட்டிகள், போர்வெல், சமுதாய கூடம், ஐந்து வயது குழந்தைகள் உண்ணும் உணவு கூடம் உள்ளன. ஆனால் எந்த கட்டிடமும் 500 மீட்டர் தொலைவில் இல்லை என குவாரி உரிமையாளர்கள் பக்கம் 319–ல் அறிக்கை கொடுத்துள்ளார்.

மேலும் 300 மீட்டர் சுற்றளவில் பசுமை வீடுகள் உள்ளன. இத்தனையும் மறைத்து தான் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். போலியான வாக்குமூலம் கொடுத்து இருக்கிறார்கள். மேலும் கரூரில் தமிழக முதல்வர் பேசினார் முகிலன் போன்றவர்கள் போராடி மணல் குவாரிகளை மூடுகிறார்கள் ஆனால் அவர்களை சிறையில் அடைக்கிறார்கள் என்று பேசினார். எனவே இந்த பயங்கரவாதிய்யை சொல்லித்தான் இன்றைய ஆட்சியாளர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமில்லாமல் 2011-இல் இன்றைக்கு கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது மாதம் ஒருமுறை மாசு கட்டுப்பாட்டு வாரிய மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தை திருச்செங்கோட்டில் நடத்தினார். ஆகவே நாங்கள் மண்ணை பாதுகாப்பவர்கள் மக்களை பாதுகாப்பவர்கள். குவாரியின் 500 மீட்டர் சுற்றளவில் இருக்கும் மக்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதற்கு காரணம் வெடிக்கும் போது வெளிவரும் விஷவாயு. மேலும் தமிழக அரசு மக்களின் வரிப்பணத்தை வைத்துக்கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் மரங்களை நடுகிறது. ஆனால் ஒவ்வொரு குவாரி உரிமையாளர்கள், 3 முதல் 4 லிஸ் வாங்குகிறார்கள், மேலும் ஒவ்வொரு குவாரியமும் 2000 மரங்கள் நட்டு வைத்திருக்க முடியும். கம்பி வேலியும் வைக்கப்படுவதில்லை. இங்கே இறப்பது கூலிக்காரர்கள். குவாரியின் உரிமையாளர்கள் அல்ல. அதேபோல மதிப்பிற்குரிய மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர், நிதின் கட்கரி அவர்கள் மாநில அரசுகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கிராமப்புற சாலையில் பத்து டன் மேல் அனுமதிக்க கூடாது என்று அனுப்பியுள்ளார். ஆனால் இங்கு 70 முதல் 80 டன் வரை ஏற்றுகிறார்கள். நான் வரும் வழியில் சாலையில் ஒன்றரை அடி பள்ளம் இருந்தது. இந்த சாலைகள் எல்லாம் மத்திய மாநில அரசுகள் பல கோடிகள் செலவழித்து மக்கள் வரிப்பணத்தில் போடுகிறார்கள் குவாரி உரிமையாளர்களாக கொடுக்கிறார்கள். கடந்த திமுக தேர்தல் அறிக்கையில் 200வது அறிக்கையில் தமிழ்நாட்டில் இனிமேல் தனியார்களுக்கு கிரானைட் உரிமம் வழங்கக்கூடாது என்று சொன்னார்கள். அதேபோல கிரானைட் குவாரிகள் அரசால் நடத்தப்பட வேண்டும். மேலும் குவாரி நடத்துபவர்கள் நிதியை 10% பசுமைக்கும் இரண்டு சதவீதம் CSR-க்கும் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு நடப்பதில்லை. எனவே கிரானைட் குவாரிகள் தனியாருக்கு கொடுக்கக் கூடாது. இந்த மாவட்டம் பல போராட்டங்களை நடத்திய முன்மாதிரியான மாவட்டம். எனவே விதி மீறல்கள் உள்ளதால் அனுமதி வழங்கக் கூடாது. மேலும் அதிகாரிகள் சரியாக செயல்பட்டு இந்த மண்ணை பாதுகாக்க கூடிய கடமையை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த குவாரிக்கு அனுமதிக்க கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் SEIAA அனுமதி கொடுத்தால் அதன் சட்டவிளைவுகளை சந்திக்க நேரிடும், எச்சரிக்கிறேன். நன்றி என்று தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு அவர்கள் மக்கள் கருத்துக்களை தெரிவித்த பின் இறுதியாக, பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்களை காணொளி வாயிலாகவும் மற்றும் எழுத்து பூர்வமாக பெற்ற கருத்துகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் மேற்படி குவாரி உரிமையாளரிடம் அனைத்து கல்குவாரிகளும் பசுமை வளையம் மற்றும் எல்லைக் கற்கள் அமைத்து அரசு விதிகளை பின்பற்றி இயங்க வேண்டும் என்று

கேட்டுக் கொண்டார். கல்குவாரி அமைவது பற்றி ஆணையம் தான் முடிவு எடுக்கும் என்னும் தெரிவித்தார். மேலும், இக்குவாரியினால் கிடைக்கப்பெறும் நிதியிலிருந்து பசுமை வளையம் (Green corridor) அமைக்கப்படும் என்றும் மற்றும் புவியியல் மற்றும் சுரங்க நிதியிலிருந்து இப்பகுதி சுற்றி அமைந்துள்ள கிராமங்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்று கூறினார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பின், இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் சார்பாக கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மேற்கூறிய குவாரி சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து எழுத்து பூர்வமான கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை. மேலும் கூட்ட நிகழ்வை காணொலி காட்சியாக "பதிவு செய்யப்பட்டு" குறுந்தகட்டில் பதிவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
குமாரபாளையம்

மாவட்ட ஆட்சியர்
நாமக்கல் மாவட்டம்